

திருச்சி டிவிஎஸ் டோல்கேட்டில் காமராசர் நூலக கட்டிடத்திற்கு முதல்தள கான்கிரீட் அமைக்கும் பணியினை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி துவக்கி வைத்தார் . உடன் மாநகர செயலாளர் மண்டலக் குழு தலைவர் மு.மதிவாணன் மாவட்ட நிர்வாகிகள் அ.த.த. செங்குட்டுவன் மற்றும் கட்டிடப் பொறியாளர்கள் அரசு உயர் அதிகாரிகள், வல்லுனர்கள் உடன் இருந்தனர்.



“உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல் தலைமையில் கரூர் ஆண்டங்கோயில் புதூரில் நடைபெற்றது. முகாமில் கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அருகில் ஒன்றிய செயலாளர் கோயம்பள்ளி பாஸ்கரன் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் உள்ளனர்.

### வணிகவரித்துறை சார்பில் மாநில வரி அலுவலகக் கட்டடங்கள்!

# பதிவுத்துறை சார்பில் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, ஆக.2-

வணிகவரி துறை சார்பில் ரூ.4.35 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 2 மாநில வரி அலுவலகக் கட்டடங்கள், பதிவுத்துறை சார்பில் ரூ.22.69 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 12 சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் செங்கல்பட்டு பதிவு மாவட்டத்தில் நாவலூர் மற்றும் கேளம்பாக்கம் ஆகிய இரண்டு புதிய சார்பதிவாளர் அலுவலகங்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (31.07.2025) தலைமைச் செயலகத்தில், வணிகவரி மற்றும் பதிவுத்துறை சார்பில் 27 கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 மாநிலவரி அலுவலகக் கட்டடங்கள் மற்றும் 12 சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் செங்கல்பட்டு பதிவு மாவட்டத்தில் திருப்போரூர் சார்பதிவாளர் அலுவலகத்தினை பிரித்து புதியதாக உருவாக்கப்பட்டுள்ள நாவலூர் மற்றும் கேளம்பாக்கம் ஆகிய இரண்டு புதிய சார்பதிவாளர் அலுவலகங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார்.

மாநிலத்தின் வரி வருவாயில் மூன்றில் இரண்டு பங்குக்கு மேல் பங்களிக்கும் முக்கிய துறையாக வணிகவரித் துறை விளங்கி வருவதோடு, வரி வசூல் மற்றும் வரி நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனையும் உறுதி செய்து வருகிறது. மேலும், பதிவுத்துறை வாயிலாக மக்கள் தங்கள் சொத்துக்களின் மீதான உரிமையை தமது பெயரில் பதிவு செய்தல், திருமணத்தைப் பதிவு செய்தல், சங்கங்கள், சீட்டுகள் மற்றும் கூட்டாண்மை நிறுவனங்கள் பதிவு செய்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயல்பாடுகளை மேலும் மேம்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

**2 மாநிலவரி அலுவலகக் கட்டடங்களை திறந்து வைத்தல்**

வணிகவரித் துறை சார்பில் திருப்பூர் மாவட்டம், தாராபுரத்தில் 1கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவிலும், திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவிலில் 2 கோடியே 53 இலட்சம் ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ள மாநிலவரி அலுவலகக் கட்டடங்கள்;

**12 சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்களை திறந்து வைத்தல்**

வணிகவரி மற்றும் பதிவுத்துறை மானியக் கோரிக்கையில் புதிய சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங் கள் கட்டப்படும் என்ற அறிவிப்பிற்கிணங்க, இராமநாதபுரம் மாவட்டம் - பெருநாழி மற்றும் கமுதி; தூத்துக்குடி மாவட்டம் - விளாத்திகுளம், கயத்தாறு, கழுகுமலை மற்றும் ஆழ்வார்திருநகரி; திருநெல்வேலி மாவட்டம் - வடக்கு வீரவநல்லூர் மற்றும் முக்கூடல்; தர்மபுரி மாவட்டம் - பென்னாகரம்; கடலூர் மாவட்டம் - பெண்ணாடம் மற்றும் குமராட்சி; தென்காசி மாவட்டம் - சிவகிரி ஆகிய இடங்களில் 22 கோடியே 69 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 12 சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள்;

என மொத்தம் 27 கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவில் வணிகவரி மற்றும் பதிவுத் துறைக்கு புதிய கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**செங்கல்பட்டு பதிவு மாவட்டத்தில் புதியதாக உருவாக்கப்பட்ட நாவலூர் மற்றும் கேளம்பாக்கம் சார்பதிவாளர் அலுவலகங்களை திறந்து வைத்தல்**

2024-2025ஆம் ஆண்டிற்கான முத்திரைத்தாள் மற்றும் பத்திரப்பதிவு மானியக் கோரிக்கையில் அறிவித்தபடி, செங்கல்பட்டு பதிவு மாவட்டம், திருப்போரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ள 64 கிராமங்களில் 9 கிராமங்களை பிரித்து புதியதாக உருவாக்கப்பட்டுள்ள நாவலூர் சார்பதிவாளர் அலுவலகத்தையும் மற்றும் 13 கிராமங்களை பிரித்து புதியதாக உருவாக்கப்பட்டுள்ள கேளம்பாக்கம் சார்பதிவாளர் அலுவலகத்தையும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இப்புதிய சார்பதிவாளர் அலுவலகங்கள் திறக்கப்படு வதன் மூலம் அப்பகுதியிலுள்ள பொதுமக்களுக்கு விரைவான மற்றும் சிறப்பான பதிவுத்துறை சேவைகளை அளிக்க இயலும்.

இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வணிகவரி மற்றும் பதிவுத்துறை

அமைச்சர் பி.மூர்த்தி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், வணிகவரி ஆணையர் எஸ்.நாகராஜன், பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், வணிகவரி இணை ஆணையர் (நிர்வாகம்) திருமதி மொ.நா. பூங்கொடி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மேட்டூர் வட்டம் – பாலமலையில் விவசாயக்

# கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்த சிறுவன் பெற்றோருக்கு ரூ.3 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஆக. 2 -

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், பாலமலை கிராமம், ராமன்பட்டியில் விவசாய கிணற்றில் தவறி விழுந்து நீரில் மூழ்கி உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள அறிவிப்பு வருமாறு:-

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், பாலமலை கிராமம், பாத்திரமடுவு, பூதுகுண்டு காடு என்ற மலைப்பகுதியில் வசித்துவரும் சித்தன் என்பவரின் மகன் செல்வன்.பார்த்திபன் (வயது 15) என்பவர் பாலமலை கிராமம், ராமன்பட்டி, பழங்குடியினர் உண்டு உறைவிட உயர்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பு பயின்று வந்த நிலையில் 30.07.2025 அன்று பள்ளிக்கு அருகிலுள்ள தனியாரின் விவசாய கிணற்றின் சுற்றுச் சுவரின் மீது அமர்ந்து கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக தவறி கிணற்றில் விழுந்து நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கும், அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதுநிலைப் பாடப்பிரிவுகளில்

# மாணாக்கர் சேர்க்கைக்கான இணையதள விண்ணப்பப் பதிவு நீட்டிப்பு!

## அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தகவல்!

சென்னை, ஆக. 2-

2025-26ஆம் கல்வியாண்டிற்கான அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதுநிலைப் பாடப்பிரிவுகளின் மாணாக்கர் சேர்க்கைக்கான இணையதள விண்ணப்பப் பதிவு நீட்டிக்கப்படுவதாக உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இது குறித்து உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் தெரிவித்துள்ளதாவது:-

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதுநிலைப் பாடப்பிரிவுகளின் மாணாக்கர் சேர்க்கைக்கான இணையதள விண்ணப்பப் பதிவு 20.06.2025 அன்று தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

விண்ணப்பப் பதிவின் கால அவகாசம் நேற்றுடன் (31.07.2025) முடிவடைந்ததால், மாணாக்கர்களின் உயர்கல்வி கனவை நனவாக்கி வரும் நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கு இணங்க மாணாக்கர்களின் முதுநிலைப் படிப்பின் நலன் கருதி, இவ்வாண்டு முதுநிலை மாணாக்கர் சேர்க்கைகான இணையதள விண்ணப்பப் பதிவினை இன்று (01.08.2025) முதல் தொடர்ந்து விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.



விண்ணப்பப் பதிவு செய்யத் தவறிய மாணாக்கர்கள் www.tngasa.in என்ற இணையதள முகவரியில் இன்று (01.08.2025 ) முதல் விண்ணப்பிக்கலாம். இவ்வாய்ப்பினைப் பயன்படுத்தி மாணாக்கர்கள் தாங்கள் சேர விரும்பும் முதுநிலைப் பாடப்பிரிவுகளுக்கு மேற்குறிப்பிட்டுள்ள இணையதளத்தில் விண்ணப்பித்து பயன்பெருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், 31.07.2025 வரை விண்ணப்பித்த மாணாக்கர்களுக்குத் தரவரிசை பட்டியல் வெளியிடப்பட்டு, சிறப்பு ஒதுக்கீடு மாணாக்கர்களுக்கான கலந்தாய்வு 11.08.2025 அன்று நடைபெறும். பின்னர் பொது கலந்தாய்வு 13.08.2025 அன்று முதல் தொடங்கி மாணாக்கர்களுக்கான சேர்க்கை நடைபெறும். சேர்க்கைகான விவரம் புலனம் (Whatsapp) மற்றும் மின்னஞ்சல் (Email) மூலம் ஒவ்வொரு மாணாக்கர்களுக்கும் அனுப்பப்படும். முதுநிலை மாணாக்கர்களுக்கான முதலாமாண்டு வகுப்புகள் 20.08.2025 அன்று முதல் தொடங்கும்.

இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.


திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**பொ. தனசேகரன்**

**ஆகஸ்ட் 2 (2015)**



தனது இளமைக் காலம் முதல் கழகத்தில் ஈடுபாடு கொண்டு சென்னை, வேளச்சேரி பகுதியில் கழக வளர்ச்சிக்கு அரும் பணியாற்றியவர்.

1962ஆம் ஆண்டில் வேளச்சேரி கிளைக் கழகப் பொருளாளராக பொறுப்பு வகித்த இவர், தாமஸ்மலை ஒன்றிய பிரதிநிதி, வேளச்சேரி வட்டச் செயலாளர், வேளச்சேரி பகுதிச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றினார்.

1996–ல் சென்னை மாநகராட்சி 153–வது வார்டில் கழகத்தின் சார்பில் மாமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களை நன்மதிப்பை பெற்றவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.


### நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., முன்னிலை!

# குத்தாலம், செம்பனார்கோவில் ஒன்றியங்களில் ரூ. 1.72 கோடியில் புதிய கட்டடங்கள்!

## அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் திறந்து வைத்து அடிக்கல் நாட்டினார்!

மயிலாடுதுறை ஆக. 2-

மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம், செம்பனார்கோவில் ஆகிய ஒன்றியங்களில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் ரூ. 1.72 கோடி மதிப்பீட்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் முடிவுற்ற கட்டிடங்களைதிறந்து வைத்து, புதிய கட்டிடங்களுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகார் சட்டமன்ற தொகுதி குத்தாலம், செம்பனார்கோவில் ஆகிய ஒன்றியங்களில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் ரூ. 1 கோடியே 72 இலட்சத்து 40 ஆயிரம் மதிப்பீட்டில் . கட்டிடங்கள் திறப்பு விழா, மற்றும் புதிய கட்டிடங்களுக்கு அடிக்கல் நாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது

இந்நிகழ்ச்சிக்கு மயிலாடுதுறைமாவட்ட ஆட்சியர் ஹெச்.எஸ்.ஸ்ரீகாந்த் தலைமை தாங்கினார். பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் முன்னிலை வைத்தார்: நிகழ்ச்சியில்

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோவில் வட்டாரத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் சங்கரன்பந்தல்; ஊராட்சியில் ரூ.78 இலட்சத்து 20 ஆயிரம் மதிப்பீட்டில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் கூடுதல் கட்டிடம் கட்டுதல் அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்து, தொடர்ந்து, காட்டுச்சேரி ஊராட்சியில் ரூ.14 இலட்சம்; மதிப்பீட்டில் அங்கன்வாடி கட்டிடம், குத்தாலம் வட்டாரத்தில் பெரம்பூர்; ஊராட்சியில் மேலபெரம்பூர் கிராமத்தில் ரூ.14 இலட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி கட்டிடம், பெருஞ்சேரி; ஊராட்சியில் சுந்தரப்பஞ்சாவடி கிராமத்தில் ரூ.12 இலட்சம் மதிப்பீட்டில் பயணியர் நிழலகம் கோமல் ஊராட்சியில் செம்பியன்கோமல் கிராமத்தில் ரூ.14 இலட்சம்; மதிப்பீட்டில் அங்கன்வாடி கட்டடம், மருதூர் ஊராட்சியில் கோட்டூர் கிராமத்தில் ரூ.13 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் கோட்டூர் அங்கன்வாடி கட்டிடம்;, தேரழந்தூர்; ஊராட்சியில் ரூ.14 இலட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி கட்டிடம், அசிக்காடு ஊராட்சியில் ரூ.12 இலட்சத்து 70 ஆயிரம் மதிப்பீட்டில் நியாயவிலைக் கட்டிடம்; என மொத்தம் ரூ.1 கோடியே 72 இலட்சத்து 40 ஆயிரம் மதிப்பிலான முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப்

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் கலந்து கொண்டு கட்டி முடிக்கப்பட்ட புதிய கட்டிடங்களை திறந்து வைத்து, புதிய கட்டிடங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

அப்போது பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் .சிவ.வீ.மெய்யநாதன் பேசுகையில்

ரூ.1 கோடியே 72 இலட்சத்து 40 ஆயிரம் மதிப்பிலான முடிவுற்ற திட்டப்பணி களை திறந்து வைக்கும் இந்நிகழ்ச்சி மிக சிறப்போடு நடைபெற்று கொண்டிருக்கின்றது. நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்; நோயற்ற வாழ்வினை தமிழ்நாடு மக்களுக்கு தருவதற்காகவும், அதுபோல் அறிவில் சிறந்த மாநிலமாக உருவாக்குவதற்கும் கல்வியும், மருத்துவமும் எனது இரு கண்கள் என போற்றி இரண்டு துறைகளுக்கும் அதிகமான நிதி ஒதுக்கியவர். குறிப்பாக, பள்ளிக்கல்வித்துறையில் இந்த நான்கரை ஆண்டுகாலத்தில், ரூ.2 இலட்சம் கோடியும், மருத்துவத்துறைக்கு பல்வேறு அடிப்படை கட்டடங்கள், சென்னையில் கிண்டியில் ரூ.250 கோடியில் உலகத்தரம் வாய்ந்த மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக உயர்தர சிகிச்சைக்காக கலைஞர் நூற்றாண்டு விழா மருத்துவமனையை கட்டித்தந்தவர். அந்த அடிப்படையில், பிப்ரவரி மாதம் 26ஆம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்; மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கையால், தமிழ்நாடு முழுவதும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் 2642 மருத்துவர்கள் நியமிக்கப்பட்டார்கள். மருத்துவர்கள் எந்த இடத்தில்இருக்கின்றார்களோ அந்த இடத்திலேயே மருத்துவமனையை தேர்ந்தெடுக்க ஆணையை பிறப்பித்ததன் அடிப்படையில், அந்தந்த ஆரம்ப சுகாதார நிலையங்களிலேயே மருத்துவர்களை நியமித்து தந்தவர். 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளீர்கள். சங்கரன்பந்தலில், 45 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இங்கு உள்ளனர். அந்த அடிப்படையில், இந்த ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக மாற நடவடிக்கை எடுக்கப்படும். கடந்த 15,16 ஆம் தேதிகளில் நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வருகைதந்தபோது, 8 அறிவிப்புகளை வெளியிட்டார்கள். அதில், தரங்கம்பாடி ஆடுதுறை செல்கின்ற சாலையை ஏழரை மீட்டர் சாலையாக அகலப்படுத்துவதற்காக ரூ.45 கோடியை அறிவித்தார்கள். அடித்தட்டு மக்கள் அத்தனை பேரும் பயன்படுத்துவது இந்த அரசு மருத்துவமனையை தான். ஆக மருத்துவனை பணிகளுக்கு இடம் தந்தவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இங்குள்ள சாலையை சரிசெய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. தமிழ்நாட்டு மக்களுக்கு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி தந்தவர் நம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். மக்களைத்தேடி மருத்தும் போன்ற மகத்தான திட்டம் கிட்டத்தட்ட 2 கோடி பேருக்கு இல்லத்திற்கே மருந்து, மாத்திரை கொண்டு சேர்க்கின்ற திட்டத்தை வழங்கியவர். முதலமைச்சரின் காலை உணவு திட்டம், பெண்களுக்கான விடியல் பேருந்து பயண திட்டம், புதுமைப்பெண், நான் முதல்வன், தமிழ்ப்புதல்வன் திட்டம் போன்ற பல்வேறு திட்டகளில் அறிவார்ந்த சமூகமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளவர் நம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். நான் முதல்வன் திட்டம் மூலமாக இந்தாண்டு 57 பேர் யுபிஎஸ் தேர்விலே ஐஏஎஸ், ஐபிஎஸ் தேர்வுகளை எழுதி, வெற்றியடைந்தார்கள். இதில் 50 பேர் நான் முதல்வன் திட்டம் மூலமாக பயின்றவர்கள். பெண்கள் தங்கள் பொருளாதார மேம்பாட்டிற்காக கலைஞர் மகளிர் உரிமைத்தொகை 1 கோடியே 15 இலட்சம் பேர் பயனடைந்து வருகின்றனர். உங்களுடன் ஸ்டாலின் என்ற மகத்தான திட்டமும் எல்லா இடங்களிலும் நடைபெற்று வருகிறது. மருத்துவ சேவைகளும் வருகின்ற ஆகஸ்ட் மாதம் தமிழ்நாடு முழுவதும்; நலமுடன் ஸ்டாலின் என்ற மகத்தான மருத்துவ முகாம்களும் நடைபெற உள்ளது என மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் பேசினார்.